செய்தி வெளியீடு எண்: 499 நாள்: 19.8.2009

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

# குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட தமிழகத்தில் செயல்பட்டு வரும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளி ஆசிரியர்கள் 650 பேருக்கு சிறப்புப் பயிற்சி

## ரூ. 34.45 இலட்சம் மதிப்பில் கணித உபகரணங்கள் வழங்க ஏற்பாடு :

தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் நிலையை அகற்றிட தொழிலாளர் துறையின் வாயிலாக தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் நடத்தப்படும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாநில அளவிலான, பயிற்சி முகாம் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தொழிலாளர் துறை ஆணையர் திரு.அ.சுகுமாரன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

தமிழகத்தில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் வேலை செய்வதை கண்டறிந்து, தடுத்து, மீட்கப்பட்ட அவர்களுக்கு கல்வி வழங்கிட தமிழக அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்பாக மத்திய அரசு உதவியுடன் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருவள்ளூர், திருச்சி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 17 மாவட்டங்களில் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்ட செயல்பாடுகளின் மூலம் பணியிலிருந்து மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இதற்காகவே தமிழகம் முழுவதும் 550 சிறப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகளில் சுமார் 18,000 குழந்தைகள் சேர்க்கப்பட்டு, நல்ல முறையில் கல்வி பயின்று வருகின்றனர். இப்படிப்பட்ட குழந்தைகளை, இரண்டு ஆண்டுகள் சிறப்புப் பள்ளிகள் மூலம் கல்வி அளிக்கப்பட்டு, பின்னர் முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இவர்கள் தொடர்ந்து கல்வி பயின்று வருகிறார்களா என்பது அந்தந்த மாவட்ட நிர்வாகம் மூலம் கண்காணிக்கப்படுகின்றது.

மீட்டெடுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மனதில் கல்வி குறித்த ஆர்வத்தை ஏற்படுத்தவும், சிறப்புப் பள்ளிகளின் வகுப்பறைகளில் உற்சாகமாக அமர்ந்து படிக்கவும், குழந்தைகளுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி அறிவியல் செயல் விளக்கப் பயிற்சி, கைத்தொழில் பயிற்சி, நாடகப்பயிற்சி மற்றும் எழுத்தறிவு, எண்ணறிவு குறித்த சம்மந்தப்பட்ட விளையாட்டுக்கள் அடங்கிய பயிற்சிகள் என தொடர்ந்து பல்வேறு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடுத்தகட்டமாக குழந்தைகள் கணித பாடத்தை உபகரணங்கள் மற்றும் செயல் விளக்கத்துடன் கற்பதற்காக சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் தமிழகம் முழுவதும் மூன்று நாட்கள் உறைவிடப் பயிற்சி நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி தமிழகம் முழுவதும் ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் மூன்று நாட்கள் வீதம் ஏழு கட்டங்களாக நடத்தப்பட உள்ளது.

/2

முதற்கட்டமாக, ஆகஸ்ட் 19, 20 மற்றும் 21 ஆகிய மூன்று நாட்களில் நடைபெறும் இந்த சிறப்புப் பயிற்சி இன்று (19.8.09) சென்னைக்கு அருகிலுள்ள முட்டுக்காடு கிரீனியோ பயிற்சி மையத்தில் கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. இ. கருப்பசாமி அவர்கள் தொடங்கி வைத்தார். ~~தொடங்கி வைக்கப்பட்டுள்ளது~~. இந்தப்பயிற்சி முகாமில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட சிறப்புப் பள்ளிகளின் ஆசிரியர்கள் பங்கேற்று உள்ளனர். பயிற்சி முகாமில் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கான கணித உபகரணங்கள் அடங்கிய பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. இவை யுனிசெப் நிறுவனத்தின் மூலம் புதுடில்லியில் தயாரிக்கப்பட்டு, வரவழைக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சியில் சென்னை AID INDIA நிறுவனத்தின் கருத்தாளர்கள் பயிற்சியளிக்க உள்ளனர்.,

இதனைத் தொடர்ந்து வேலூர், கிருஷ்ணகிரி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய மையங்களில் இதே பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. **ஆகஸ்ட் 25, 26 மற்றும் 27** ஆகிய தேதிகளில் **வேலூர் மாவட்டம்,** ஏலகிரியிலுள்ள **ஒய்.எம்.சி.ஏ. மையத்தில்** நடைபெறும் பயிற்சியில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கும், **செப்டம்பர் 1, 2 மற்றும் 3** ஆகிய தேதிகளில் **கிருஷ்ணகிரி மாவட்டம்,** மதகொண்டபள்ளிக்கு அருகிலுள்ள **ரைஸ் பயிற்சி மையத்தில்** கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைச் சேர்ந்த சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கும், **செப்டம்பர் 8, 9 மற்றும் 10** ஆகிய தேதிகளில் **மதுரை** காமராஜர் பல்கலைக் கழக சாலையில் உள்ள **பில்லர் பயிற்சி மையத்தில்** தூத்துக்குடி, திருச்சி மற்றும் விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கும், **செப்டம்பர் 22, 23 மற்றும் 24** ஆகிய தேதிகளில் **சேலம் மாவட்டம்,** ஏற்காடு மலையில் அமைந்துள்ள **ஹவுஸ் ஆப் பீஸ்** (House of Peace) எனும் பயிற்சி மையத்தில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கும், **அக்டோபர் 5, 6 மற்றும் 7** ஆகிய தேதிகளில் **மதுரை பில்லர் பயிற்சி மையத்தில்** தேனி, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கும், **அக்டோபர் 8, 9 மற்றும் 10** ஆகிய தேதிகளில் **கோயம்புத்தூர் மாவட்டம் ஆணைமலை** அருகில் உள்ள கே.கே.ஐ.டி(KKID) பயிற்சி **மையத்தில்** கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

மண்டல அளவில் நடைபெறும் இந்த பயிற்சிகளில் கணித செயல் விளக்கப் பயிற்சியும், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளை திறம்பட நடத்துவதற்காக மாணவர்களை மகிழ்விக்கும் செயல்பாடுகள் அடங்கிய பயிற்சிகளும் நடத்தப்படவுள்ளன. இந்தப்பயிற்சி தமிழகம் முழுவதும் உள்ள 550 சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் 650 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட உள்ளது. பயிற்சியின் முடிவில் ரூ.5300/- மதிப்பிலான **கணித உபகரணப் பெட்டிகள் 650 ஆசிரியர்களுக்கும்** மொத்தம் சுமார் ரூ. 34.45 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட உள்ளது.

2/2

வெளியீடு:
தொழிலாளர் ஆணையர், சென்னை-6.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.